<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>

<u>EA.04/2022</u>
<u>in</u>
<u>EP.No. 90/2010</u>

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.எஸ். சங்கர் கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 22 –ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 22.01.2026**

**பெயர் – ரங்கன்**

**த/பெ – வெங்கடேசன்**

**தொழில் – கூலி தொழில்**

**ஊர் – திருவொற்றியூர்**

**வயது – 65**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் : 12.40 P.M**

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

1. அசல் வழக்கு. 158/1999 இரவணம்மாள் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்தேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றால் சரிதான்.

2. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் இரவணம்மாள் என்பவர் என்தாயார் குப்பம்மாள் மீது பொன்னேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் என்றார் என்று குறிப்பிட்டுள்ளேன்

என்றால் சரிதான். இரவணம்மாள் இறந்த பிறகு அவருடை மகள் பத்மலட்சுமி வழக்கை நடத்தி வந்தார் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்கூறிய வழக்கில் என்னுடைய தாயாருக்கு சம்மன் வந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு திருவொற்றியூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றலாகி வந்தது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயார் வழக்கை வழக்கறிஞர் வைத்து நடத்தி வந்தார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞரை வழக்கு சம்மந்தமாக எனது தாயார் அடிக்கடி சந்தித்தாரா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பதிலுரை தாக்கல் செய்ய எனது தாயாரின் வழக்கறிஞர் நீதிமன்றத்திடம் அவகாசம் கோரினார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. 24.09.2002 ல் மேற்கூறிய வழக்கில் வழக்கு சொத்தை எனது தாயார் காலி செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் மேற்கூறிய வழக்கில் ஒருதலைப்பட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. இம்மனுவில் சொத்து விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். சொத்து விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கு வீட்டின் அடிமனை எனக்கு சொந்தமானதல்ல என்றால் சரியல்ல எனக்கு சொந்தமானது தான். எனக்கு சொந்தமானது என்பதற்கு சான்றாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் ஏதும் இல்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆவணங்கள் இருக்கிறது. நான் இருக்கு சொத்தின் வடக்கு பகுதியில் பாதை உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் பாலகிருஷ்ணனின் வீடு உள்ளது

என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் என்பவர் எதிர்மனுதாரர்களிடம் அடிமனை வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. EP மனுவில் சொத்தின் மேற்கு பகுதியில் தீர்ப்பு பயனாளிகளுக்கு சொந்தமாக இடம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதை எதிர்த்து என்னுடைய பதிலுரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ ஏதும் தெரிவித்துள்ளேனா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. எனது தாயார் காலமான விவரத்தை அவரது வழக்கறிஞரிடம் தெரிவிக்கப்பட்டதா என்றால் என்கு அது குறித்து தெரியாது. நான் எனது தாயாருடன் சேர்ந்து வசித்து வந்தேனா என்றால் இல்லை தனியாக வசித்து வந்தேன். நான் வசித்து வந்த முகவரி என்ன என்றால் வ.உ.சி. நகர், தண்டையார் பேட்டை ஆகும். இம்மனுவின் 2ம் மனுதாராரும் தனியாக வசித்து வந்தாரா என்றால் இல்லை மேற்கூறிய முகவரியில் தான் வசித்து வந்தார்.

4. நானும் இம்மனுவின் 2ம் எதிர்மனுதாராரும்EP மனுசொத்தில் தான் வசித்து வருகிறோம் என்பதற்கு சான்றாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பத்மலட்சுமி என்பவர் என்னை மனுசொத்தில் இருந்து காலி செய்ய மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவரிடம் அடிமமையை வாங்குவதற்கு நான் நேரடியாக சென்று பேச்சுவார்த்தை நடத்தினேனா என்றால் சரியல்ல. EP மனுசொத்தில் எனக்கு உரிமையில்லை என்பதால் எனக்க இம்மனுவினை தாக்கல் செய்ய உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

5. EP மனுவின் மூலம் எனக்கு நீதிமன்ற அறிவிப்பு எப்போது வந்தது என்றால் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வந்தது. EP மனு 2010 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும் இம்மனு 2022 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏன் காலதாமதமாக இம்மனு

தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரத்தை இம்மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் EP மனுதாரர்களிடம் அடிமனை வாடகைக்கு வந்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் EP மனுதாரர்களிடம் அடிமனை வாடகைக்கு வந்தார் என்றும் EP மனுதாரர்களின் அனுமதியுடன் மேற்கூரை கட்டினார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இம்மனு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிந்தது)

**விசாரணை முடியும் நேரம்:- 01.15 P.M**